# வேள்பாரி– கதாபாத்திர வடிவமைப்பும் கதைக் கட்டுமானமும்

***அ. டெய்சி***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)

***முனைவர் அ. பாக்கியமுத்து***
இணை பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

***முனைவர் ஜ. இந்திரா***
உதவிப் பேராசிரியர், முதுகலைத் தமிழ் உயராய்வு மையம்
இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மே**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8971

### முன்னுரை

சங்ககால வாழ்வை நோக்கிய பயணங்கள் பெருங்களிப்பு நிறைந்தவையாகும். இதுவரை நாம் கடந்திராத பேரனுபவத்தைத் தரவல்லது. ஒரு நிலம் ஒரு குலமாக உருவெடுத்து, அதிலிருந்து பல்வேறு குலங்களாகப் பிரிந்து தங்களுக்குள் இணக்கமாகவும், இணக்கம் மறைந்து சண்டையிட்டும் வாழ்ந்த கதைகளுக்கான குறிப்புகளை நம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது.

பல நூறு ஆண்டுகள் கடந்துபின்னும் ஆதிமனிதனை நோக்கிய நம் தேடலும், பயணமும் அதன் மூலம் கிடைக்கும் தரவுகளும், தொடர்ந்து நம்மை வியப்படையச் செய்கின்றன. நம்மை நாமே ஏன் பின்சென்று பார்க்க வேண்டும் என்ற அவசியத்தையும் வரலாற்றையும் மீண்டும் மீண்டும் பிரதி எடுப்பதன் கட்டாயத்தையும் வரலாற்று ஆசிரியர்களின் மூலம் காலம் நிகழ்த்திய படியேதான் இருக்கின்றது. காலத்தின் வேர்பிடித்து நடக்கும் அவர்களும் அந்தப் பிரதியை மீட்டெடுத்துக் கொண்டே தான் இருக்கிறார்கள். அவ்வகையில் வேள்பாரி என்னும் புதினம் சமகாலத்தில் எழுதப்பட்ட வரலாற்றுப் புனைவு என்றே நான் கருதுகிறேன். ஆதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### கபிலர் பயணம்

பறம்பு நாட்டை வழிநடத்தும் வேள்பாரி எனும் தலைவனின் வள்ளல் தன்னை குறித்து அறியும் பெரும்புலவர் கபிலர், அதனை உறுதிசெய்யும் பொருட்டு பறம்புநாட்டை நோக்கியே தன் பயணத்தை மேற்கொள்கிறார்.

அந்த பயணத்தின் ஊடாக அவர் தெரிந்து கொள்ளும் ஒவ்வொரு தகவலும் அவருக்கு வியப்பை ஏற்படுத்துகின்றது. பின் கோடைக் காலத்தில் பறம்பு நாட்டினுள் நுழையும் கபிலர், அடர் மழைக்காலத்திற்குள் பறம்பிலிருந்து கீழ் இறங்கிட வேண்டும் என்று நினைக்கிறார். ஆனால் காலமோ வேறொரு பதிலை வைத்திருக்கின்றது.

பாரியின் ஒப்பற்ற பண்பு நலன்களின் மூலம் ஈர்க்கப்படும் கபிலர் குறிஞ்சி நிலத்திலேயே தன்னையும் ஒருவனாக மாற்றிக் கொள்கிறார். பறம்பு நிலத்தின் ஒருவனாக மாறப்போகிறார். இங்கே கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம் நாவல் ஆரம்பித்து முடிவடைவது ஒரு பின்கோடை காலத்திற்கும் மற்றொரு பின்கோடைக் காலத்திற்குமான இடைப்பட்ட பகுதியில் அதற்குள் இவ்வளவும் நடந்து விடுகின்றது.

பெரும்புலவலர் என்று மூவேந்தர்களால் கொண்டாப்படும் கபிலர் தன்னை முற்றும் அறிந்தவனாகவே உணர்கிறார். பெரும்புலவன் என்ற கர்வம் அவரிடம் சிறிதேனும் இருந்திருப்பதால் பறம்பை நோக்கிய பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

கபிலர் ஒரு முன்முடிவு இருந்துள்ளது. அது பாரி என்னும் தலைவன் புகழ் போதையில் மயங்கிக் கிடப்பவன் என்று. அப்படிப்பட்ட கபிலரின் மனமாற்றமே பாரியின் பாதையில் நம்மையும் தொடர்ந்து பயணிக்கச் செய்கிறது. பாரி குறித்மு ் பறம்பு நாடு குறித்தும் கபிலருக்குச் சொல்லப்படும் விவரணைகளின் மூலமாகவே கபிலரோடு இணைந்து நாமும் பயணிக்கிறோம். பறம்பு மலைக்குள் நுழைந்த மறுகணமே கபிலருக்குப் புரிந்து விடுகின்றது அந்த நிலம் குறித்தும் அங்கு வசிக்கும் மக்கள் குறித்தும் தனக்கு எதுவுமே தெரியாது என்று அனைத்தும் அறிந்தவன் எனும் எண்ணம் இருப்பவனால் எதையும் தெரிந்துகொள்ள முடியாது. தன் பலவீனத்தை உணரும் கபிலர், நொடிப்பொழுதில் அதிலிருந்து வெளியேறி தெளிந்த மனதுடன் தனக்கான கேள்விகளைக் கேட்கத் தொடங்குகிறார்.

கேட்கும் ஒருவனுக்கே பதில் கிடைக்கும் என்றாலும், அனைத்தும் அறிந்தவனுக்கு இது கூடத் தெரியவில்லையா? என்று தன் அறியாமை எள்ளி நகைக்கப்படும் அவஸ்தைக்கும் ஆளாகிறார் கபிலர்.

**கதாபாத்திரக் கட்டமைப்பு**

வேள்பாரி புதினத்தின் தலைசிறந்த அம்சம் அதன் கதாபாத்திரக் கட்டமைப்பு. மிக நீண்ட ஒரு வரலாற்றுப் புனைவில், பலவிதமான கதாபாத்திரங்கள் வந்து செல்கின்ற கதைக்களத்தில் ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் தனித்துவமான குணங்கள் கொடுக்கப்பட்டு அந்த குணங்கள் மிகப் பொருத்தமாக வேறுபடுத்திக் காட்டப் பட்டுள்ளன. நாவல் நிறை வடையும் வரையிலும் நம்மால் நிலை நிறுத்திக் கொள்ளவும் முடிகின்றது. இந்த நாவலின் வெற்றிக்கு இதுவும் ஒன்றாகும்.

நாவலின் மைய கதாபாத்திரம் பறம்பும் பாரியும் என்றாலும் இவர்கள் அனைவரையும் ஒரு புள்ளிக்குள் கொண்டு வரும் கதாபாத்திரம் கபிலர். கபிலருக்குச் சொல்லப்படும் கதையே நமக்கும் சொல்லப்படுகின்றது. பின் கபிலர் பார்க்கும் கதையே நாம் அறியும் கதையாகும். கபிலர் பறம்பி கதையே முதலில் நீலனின் மூலமும் பின் வேட்டுவப் பழையனின் மூலம் அதன் தொடர்ச்சியாக அதிரன் மற்றும் பாரியின் மூலமும் தெரிந்துகொள்கிறார்.

இவ்வாறு கதைகேட்கும் கபிலர் என்ற கதாபாத்திரம் மீது வைக்கப்படும் பிரம்மாண்டமான சித்திரமானது எங்குமே தன் பிரம்மாண்டத்தை வெளிப்படுத்தி இருக்காது என்பதும் உண்மை. கபிலரின் உருவம் நாவலின் தொடக்கத்திலேயே மிக வலுவாகக் கட்டமைக்கப்பட்ட ஒன்று என்பதால் அதனையும் மீறி அது தன்னை

வெளிப்படுத்த வேண்டிய தேவையும் இல்லை என்ற கூற்றும் ஏற்புடையதாகும்.

பாரியைச் சந்திக்கச் செல்கிறேன் என்று கபிலர் கூறிய அடுத்த நிமிடம் அருகநாட்டு அரசன் செம்பன், தானே அவர்தம் தேரை செலுத்தி வந்துவிடுகிறேன் என்று கூறும் கபிலரை ஆரம்பக் காட்சியாகட்டும், ஆளிகாட்டில் கபிலரை முதல்முறையாக சந்திக்கும் வேள்பாரி வீடு வரைக்கும் கபிலரை தன் தோளில் சுமந்து செல்லும் காட்சியாகட்டும், கபிலரின் புகழ் ஆரம்பத்திலேயே நமக்குக் கூறப்பட்டு விடுகின்றது. அதற்கு மேலும் தன் புலமையை விசாலமாக்க அவருக்கு இருக்கும் ஒரு வாய்ப்பு பறம்பைப் பற்றித் தெரிந்துகொள்வது மட்டுமே. ஆக கபிலரின் கதாபாத்திரம் கதைகேட்டு அதன் மூலம் தன் புலமையை விருத்தி செய்து கொள்ளும் ஒன்றாகவே கட்டமைக் கப்பட்டிருக்கின்றது.

இங்கே கபிலருக்கு அதுபோன்ற பயிற்சிகள் இல்லை என்றாலும், கபிலர் தனக்குத்தானே அந்த பயிற்சியை வைத்துக் கொள்கிறார். தனக்கு வைக்கப்பட்ட நாவல் பழ பயிற்சியை தன் ஆசான் திசைவேழருக்கு வைப்பதாகட்டும், குதிரை ஓட்டிவருகையில் பறம்பு மக்களின் கண்களுக்கு அவர் முடியனை ஒப்ப காட்சியளிப்பதாகட்டும், கபிலர் வெகுமேகமாகத் தன்னை பறம்பு நாட்டுக்கு இயைந்தவனாக மாற்றி இருப்பார்.

மூவேந்தர்களுடனான போரில் கபிலர் கூறும் ஆலோசனைகள் முக்கிய திருப்பமாக அமையும் என்று நினைத்தேன். அப்படியெந்த காட்சிகளும் இல்லை என்பதை அறிய முடிகின்றது.

### கபிலர் பாரியைச் சந்தித்தல்

கபிலர் முதல்முறையாக பாரியைச் சந்திப்பதற்கான முந்தைய இரவில், பழையனும், கூழையனும் பேசிக்கொள்ளும் உரையாடல்களின் மூலம் கபிலர் ஒருவேளை பறம்பு நிலத்தை வேவு பார்க்க வந்த ஒற்றனாகத் தான் பறம்பின்னுள் நுழைந்தாரோ என்ற எண்ணம் அவர்களுக்கு எழுந்தது. அதன்பின் நிகழும் மாயஜாலம் வேள்பாரியின் உச்சமாகும். இறுதியில் கபிலர் பாரியைச் சந்திக்கும் பொழுதினைக் கதையில் காணமுடிகின்றது.

கபிலருக்கு அடுத்தப்படியாக கவனிக்கப் படும் கதாபாத்திரம் நீலன் ஆகும். முதல் அத்தியாயத்தில் பறம்புநாட்டின் முதல் சாட்சியாக வெளிப்படும் நீலனின் கதை, நெடுகவளர்ந்து முடிவில் கதையின் நிறைவை நோக்கியும் அவனே அழைத்துச் செல்கிறான் என்பதன் மூலம் அவன் கதையின் முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது.

### கதை கட்டுமானம்

இந்த நாவலின் சுவாரசியத்தை அதிகரிக்கும் முறைகளில் ஒன்று கதை கட்டுமானமாகும். இத்தகைய பெரிய நாவலில் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அதன் கட்டுமானத்தைப் புரிந்துகொள்வது அவசியமாகும். புதினம் முழுக்கவே நாவலின் ஆசிரியர் அது ஒன்றை நமக்கு முதலில் அறிமுகம் செய்கிறாரோ அதுவே இப்புதினத்தின் அடுத்த அத்தியாயத் தில் பேருகொள்ள இருக்கிறது. அல்லது திருப்புமுனையாகப் போகின்றது. நாவலின் தொடக்க அத்தியாயங்களிலேயே கண்டுகொள்ள முடிகின்ற இந்த உத்தியை கதையின் கடைசி பகுதி வரை மிக அருமையான கதைப்போக்குடன் பயன்படுத்தி இருக்கிறார் ஆசிரியர். சான்றாக இந்நாவலில், முதலில், “மூக்கை விடைத்தபடி பாய்ந்து கொண்டிருந்த குதிரைகள், மேடு பள்ளமற்ற பாதை இன்னும் விரைந்து, வா! ஏன்று தேரோட்டியை அழைத்து” என்ற கதையின் ஆரம்பத்திலேயே சுவாரசியத்தை உருவாக்கும் தன்மை ஆசிரியரின் கதை கட்டுமானத்திற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

நீலனை நாம் சந்திக்கும் முதல் தருணமே அவன் படபடவென்று ஓடுகிறான். செய்ய வேண்டிய காரியங்களை சடுதியில் செய்கிறான். தன்னுடைய வேகத்திற்கு ஈடுகொடுத்து நடக்க முடியாத கபிலர் குறித்து அவன் கூறும், "வீரர்களின் வாழ்நாள் மிகக் குறைவு, காத தூரத்தை இத்தனை நாழிகைக் கடக்கமாட்டார்கள்" வார்த்தைகளின் மூலமே அவனுள் இருக்கும் துடிப்பை நம்மால் அறிந்துகொள்ள முடியும்.

## கொற்றவை கூத்து

நாவலின் போக்கில் குறிஞ்சி நில மூப்பர்களான முருகன் வள்ளியின் கதை எத்தனை முக்கியமானதோ, அந்தவகையில் கொற்றவைக் கூத்தும் முக்கியமானதாக அமைகின்றது. அதன்மூலம் கூறப்படும் கதைகளும், நிலத்தின்மீது குலங்கள் தோன்றிய வரலாறும், அந்த குலங்கள் அழிந்து எப்படி மன்னராட்சி தோன்றியது என்ற கதையின் போக்கை மிகத் தெளிவாக கட்டமைக்க உதவும் இடமாக கொற்றவைக் கூத்து அமைகின்றது. இந்த ஒவ்வொரு கூத்தும் அதன்மூலம் கூறப்படும் கதைகளுமே தனித்துவம் வாய்ந்தகை. இந்த கூத்தின் மூலமே நீலன் குறித்தும் அதிரன் குறித்தும் நம்மால் தெரிந்துகொள்ள முடிகின்றது.

## ஆதிரன்

நீலனுக்கு அடுத்த முக்கியத்துவம் அதிரனுக்கு அதிரன், நாகர்களின் குலத்தைச் சார்ந்தவன். அங்கவையின் மனதில் இடம் பிடிக்க இருப்பவன். மூவேந்தர்களுடான போரில் தன் படையை முன்னின்று வழிநடத்தப் பாரியின் கண்காணிப்பிலேயே இருக்கக் கூடியவன் என்ற பொறுப்பும் அவனுக்கு இருக்கிறது. அதிரனுக்கு அங்கவைக்கும் இயம்ப வளரும் காதலை பாரி கண்டுகொள்ளக்கூடிய தருணமே அற்புதமான ஒன்று. இந்தக் கதையில் நமக்கு விடைதெரியாத கேள்விகள் இரண்டே இரண்டு. ஒன்று கபிலருக்கான அரவை விருந்துக்குத் தேவையான அறுபதாங்கோழி எப்படிக் கிடைத்தது? மற்றொன்று பாண்டிய இளவரசி பொற்சுவையின் முன்னாள் காதலன் யார்?

விடை தெரியாத இரண்டு கேள்விகள் என்று கூறக்காரணம், கதை முழுக்க கபிலர் கேள்வி கேட்டுக்கொண்டே இருக்க, அவர் கேட்காத இரண்டு கேள்விகள் இவையாகத் தான் இருக்க வேண்டும். என்பதால்தான், அதில் ஒன்றுக்கு ஏற்கனவே அவருக்குப் பதில் தெரியும். இரண்டாவது இந்த அறுபதாங்கோழி.

## அறுபதாங்கோழி

அறுபதாங்கோழி கிடைத்துவிட்டது என்ற தகவலை சங்கவை பாரியிடம் கூறும் நொடியே அது அங்கவையின் மூலமே கிடைத்திருக்கக் கூடும் என்ற விஷயத்தை பாரி கண்டுபிடித்திருப்பார் காரணம் அங்கவை காதலில் விழுந்துவிட்டாள் என்பதை அதற்கு முந்தைய அத்தியாயத்தில் அவள் அந்த சந்தன வேங்கையை கூர்ந்து நோக்கும்போதே கண்டுபிடித்திருப்பார். மேலும் அறுபதாங்கோழி முட்டையிடும் தீப்புல் காதலர்களின் கண்களுக்கு மட்டுமே தெரியும் என்ற தகவலை நீலனின் மயிலா, அங்கவை தன்னிடம் கூறியதாக நீலனிடம் கூறுவாள். இவையனைத்தையும் கணிக்கும் பாரி பேரெலி வேட்டையின் போது அதிரனையும் சேர்த்தே துரத்திச் சென்றிருக்கக்கூடும். இவன் தன் ஏற்றவன்தானா என்பதை கண்டுபிடிக்கும் பொருட்டு ஒரு நாவலின் சுவாரசியமான பகுதிகள் சொல்லப்படாத தகவல்களே.

## வாரிக்கையன் தேக்கன்

நீலனுக்கும் அதிரனுக்கும் அடுத்த இடம் வாரிக்கையனுக்கும் தேக்கனுக்கும். வாரிக்கையன் ஊரில் மிக மூத்தவன். தலைவனே மதிப்பு கொடுக்கும்

பெருங்கிழவன். நடக்கும் அத்தனை யுத்தங்களிலும் தலைமை ஆலோசகன் மற்றும் முடிவெடுப்பவன். தேக்கன், அந்தப் பெருங்காட்டின்பேராசான்.தன்குலத்தவருக்குக் காடறியத் தேவையான சகல நுட்பங்களையும் கற்றுக்கொடுப்பவன். காட்டு வாழ்க்கைகு அவர்களை தயார் செய்வான்.

இந்த நாவலில் ஒரு பகுதி மிக அழகாகக் கூறப்பட்டிருக்கும்.

**வாரிக்கையன் பழையன் - முதல் தலைமுறை**
**தேக்கன், கூழையன் - இரண்டாம் தலைமுறை**
**பாரி, முடியன் - மூன்றாம் தலைமுறை**
**அதிரன், நீலன் - நான்காம் தலைமுறை**

இந்த நான்கு தலைமுறை கதா பாத்திரங்களும் மையமாகச் சுழன்று கட்டமைத்திருப்பதே இந்த நாவலின் ஒட்டுமொத்த சித்திரமும் ஆகும்.

வேள்பாரி என்னும் இந்நாவலில் கவனிக்கப்படவேண்டிய மற்றொரு அம்சம் கற்றலும் கற்றுக்கொடுத்தலும். இந்த நாவல் முழுக்கவே யாரோ ஒருவர் இன்னொரு வருக்குக் கற்றுக் கொடுப்பவராகவும், கற்றுக் கொள்பவராகவும் தான் இருக்கிறார்கள். வள்ளி முருகனுக்கோ, முருகன் வள்ளிக்கோ கற்றுக் கொடுப்பதாகட்டும், இப்படி கற்றலின் மூலம் அறிவை விருத்தி செய்த ஒரு இனமாகவும், தொடர்ந்து கற்றுக் கொடுத்தலின் மூலம் தொடர்பை இழந்துவிடாத ஒரு இனமாகவும் இந்த கதையின் வரலாறு கட்டமைக்கப் பட்டுள்ளது.

### காதல் மற்றும் திருமணம்

காதல் மற்றும் திருமணம் என்ற வகையில் இங்கு யாரும் யார் மீதும் காதல் கொள்ளலாம். திருமணத்திற்கு முன்பே உறவும் கொள்ளலாம் என்றே திருமணம் சார்ந்த சமூகவியல் சித்தரிக்கப்பட்டுள்ளது.

கபிலர் பாரியையும் பறம்பையும் அறியவந்தவராக என்றபோதும் வேட்டுவன் பாறையில் மக்களின் வீட்டில் இருக்கக் கூடிய திறளிமரத்துப் பலவகையைப் பார்க்கும்போது சமவெளி மக்கள் அந்தப் பலகையை எவ்வாறு யவன வணிகத்திற்குப் பயன்படுத்துகின்றனர் என்ற நினைவுகளாகக் காட்சிகள் வணிகத்தை நோக்கி விரிந்து விரிந்து பறம்பை நோக்கி வரும்.

நாவல் முழுக்கவே கபிலர் சந்திக்கும் அனைவரும் பாரியின் பெருமையைப் பேசிக் கொண்டேதான் இருக்கிறார்கள். பாரியைத்தவிர, ஒரு காட்சியில் சேர நாட்டு அமைச்சன் கோளுர்சாத்தான் வாணிபம் பேசும் நோக்குடன் பாரியை சந்திக்க வருகிறார். பறம்புநாட்டுக் கொள்கையின்படி, எதற்காகவும் யாருடனும் வாணிபம் செய்வதில்லை என்பதால் அவனை திரும்ப அனுப்பிவிடுகிறான் பாரி. ஆனால் என்ன அதேநேரம் இந்தக் கேள்வியைப் பறம்பு நாட்டின் எல்லைக்காவல் வீரன் கூழையன் அறிந்திருப்பான். அதாவது எந்தக் கேள்வியை யார் யாரிடம் கேட்கவேண்டும் என்ற முறைமைக்கான சான்று இந்தக்காட்சியாகும். இதுபோன்ற நுட்பமான விவரணைகளுடனேயே இந்த நாவல் பயணிக்கிறது.

### பண்டமாற்றம்

சங்ககாலம் தொட்டே நம்மிடையே தவிர்க்க முடியாத பொருளாகத் தான் இருந்து வருகிறது. பறம்பு நாட்டின் பிரதான குலம் வேளீர்குலம் என்பதாகும். பறம்பு நாடு முழுக்கவே அழிந்துபோகும் தருவாயில் இருக்கும் பல குலத்தைச் சேர்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரணாக பறம்புநாடு இருக்கிறது. இதில் பெரும்பாலான குலங்கள் அழிவைச் சந்திப்பதற்கு காரணமாக உப்பு விற்கும் குலமான உமணர்கள் இருக்கிறார்கள் என்ற போதிலும் பறம்பு நாடு உப்பை உமணர்களிடம் இருந்து தொடர்து பண்டமாற்றம் செய்த படியே தான் இருக்கிறார்கள்.

**பறம்பு குற்றமற்ற நாடு**

பறம்புநாட்டைப் பொறுத்தவரையில் குற்றங்களுக்கான தண்டனையோ அல்லது அவர்களை அடைத்து வைக்கும் சிறைச் சாலையோ கிடையாது. தலைவனை அழிக்க வந்த குலம் சிக்கிக் கொண்டபோதும் கூட இனி நீங்கள் பறம்பில் இருக்கும்வரை ஆயுதங்களை தொடக்கூடாது என்ற நிபந்தனையே விதிக்கிறார்கள். இதைக் கூறுவதற்குக் காரணம் பறம்புநாடு மொத்தமுமே குற்றமற்றவர்கள் நிறைந்த நாடாகத்தான் இருக்கிறது. குற்றமற்றவர்கள் தானே தவிர அவர்கள் மனதிற்குள் கோபமும் பழியுணர்ச்சியும் இல்லாமல் இல்லை. தங்களை அழித்த மன்னர்களை அழிப்பதற்கான நேரத்தை எதிர்பார்த்ததே காத்திருக்கிறார்கள். அப்படியொரு வாய்ப்பாகவே மூவேந்தர்கள் உடனான யுத்தத்தை எதிர்கொள்கிறார்கள்.

பெண்களுக்கான முக்கியத்துவம் என்ற வகையில் பெண்கள் எவரும் போர்க் களங்களில் இறங்கி போர்புரியவில்லை. அதேநேரம் கொற்றவை, யட்சி என்ற இரண்டு பெண் தெய்வங்கள் போர்த் தெய்வங்களாகவும் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது கவனிக்கப் பட வேண்டிய ஒன்று. பறம்பு நாட்டுப் பெண்கள் போர்த்தொழிலில் ஈடுபடவில்லையே தவிர பறம்புநாட்டைச் சுற்றி எழுப்பப்பட்டிருக்கும் நாகப்பச்சை வேலியை அவர்கள் கட்டமைத்திருக்கிறார்கள். அந்தவகையில் பாதுகாப்பு என்பதில் பெண்களும் சமபங்கு வகிக்கிறார்கள்.

**முடிவுரை**

இவ்வாறாக, வீரயுகநாயகன் வேள்பாரி என்னும் மாபெரும் நாவலின் ஆராயப் பட்டுள்ள கதாபாத்திரங்கள் மற்றும் கதை கட்டுமான அமைப்பும் ஆராயப் பட்டுள்ளது. அதன்வழியாக இந்நாவலின் கதாபாத்திரங்கள் வேள்பாரி, கபிலர், நீலன் போன்ற கதாபாத்திரங்கள், கதை கட்டமைப்பினைப் பற்றியும் ஆராயப் பட்டுள்ளது அறியமுடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**

1. வீரயுகநாயகன் வேள்பாரி பாகம் 1,2 - சு.வெங்கடேசன் - விகடன் பிரசுரம், சென்னை - முதற்பதிப்பு 2018.